**In the Court of Judicial Magistrate No.I, Kovilpatti.**

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII, Cr.P.C)

| | | |
|---|---|---|
| Case No. | : | CC NO. 499/2021 |
| Deposition of witness for Prosecution | : | P.W – 3 |
| Name | : | ஜெயராஜ், வயது 46 |
| Father Name/Husband Name | : | மாரியப்பன் |
| Village | : | கோவில்பட்டி |
| Taluk | : | கோவில்பட்டி |
| Calling | : | தலைமைக்காவலர் |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 20th day of February 2023.

**(எதிரி ஆஜர் இல்லை கு.வி.மு.ச பிரிவு 317 ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)**

<u>முதல் விசாரணை</u>

1. நான் தற்போது நாலாட்டின்புதூர் காவல்நிலையத்தில் தலைமைக்காவலராக பணியில் உள்ளேன். சம்பவ சமயத்தில் கோவில்பட்டி கிழக்கு காவல்நிலையத்தில் தலைமைக்காவலராக பணியில் உள்ளேன். கடந்த 11.03.2021 ஆம் தேதி 00.30 மணிக்கு நிலைய பொறுப்பில் இருந்த போது கோவில்பட்டி ஸ்டாலின் காலனியை சேர்ந்த கணேசன் மகன் வீரா என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவினை பெற்று அதன் தன்மைக்கு ஏற்ப நிலைய குற்ற எண். 168/2021 பிரிவுகள் 294(b), 324, 506(2) IPC வழக்காக பதிவு செய்தேன்.
2. நான் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை மற்றும் அசல் புகார் மனுவை கனம் நீதிமன்றத்திற்கு அனுப்பியும் பிற நகல்களை உயர் அதிகாரிகளுக்கு அனுப்பியும் ஒரு நகலை விசாரணை அதிகாரியின் பார்வைக்கும் வைத்தேன். **(நான் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** வழக்கு பற்றி விசாரணை அதிகாரி என்னை விசாரித்தார்.

<u>எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை</u>

1. அ.சா.1 தான், தான் கோவில்பட்டி அரசு மருத்துவமனையில் காயம்பட்ட நபரை சிகிச்சையில் சேர்த்தாக அ.சா.ஆ.1 புகாரில் சொல்லியுள்ளார் என்றால் சரிதான்.
2. காயம்பட்ட நபரின் காயத்தன்மை பற்றியும் இரத்தப்போக்கு இருந்ததாகவோ அ.சா.ஆ.1 புகாரில் சொல்லவில்லை என்றால்

சரிதான். சம்பவம் நடைபெற்றது சுப்பிரமணியாபுரம் மேட்டு தெரு, 6 வது தெரு என்று சொல்லவில்லை என்றால் சுப்பிரமணியாபுரம் 3 வது தெரு என்று சொல்லியுள்ளார்.

3. அ.சா.ஆ.1 ல் காயம்பட்ட நபர் எதிரியின் மனைவியிடம் தான் பேசவில்லை என்றோ தன் செல்போனை பார்த்துக்கொள் என்றோ சொல்லவில்லை என்றால் சரிதான்.
4. நீங்கள் சொன்னது போல் சொன்ன நாள் நேரத்தில் அ.சா.1 இடம் புகார் மனு பெற்று அதன் அடிப்படையில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ததாக சொல்வது உண்மை அல்ல என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

Taken before me in open court in the presence of accused and read over to the witness and acknowledged by him/her to be Correct.

Sd/ Tr. M. Kadarkarai Selvam
Judicial Magistrate No.I,
Kovilpatti.